61

உ

ஸ்ரீராமஜெயம்



1531

OFFICE OF THE REGISTRAR ... 31 JUL 1913 ... MAD

# ருக்மாங்கெத சரித்திர கும்மி

இஃது

மதுரை லக்ஷிமிநாராயணபுர அக்கிரஹாரத்திலிருக்கும்
திருப்புவனம்
சீதாலக்ஷிமி அம்மாளால்

இயற்றப்பட்டு

---

மதுரை கிருஷ்ணவிலாஸ் பிரஸ்ஸில்
பதிப்பிக்கப்பட்டது

1913

[...ed copy right] [இதின் விலை அணா 9

0-85MSL6, R
N13
139936

உ

ஸ்ரீராமஜெயம்.



# ருக்மாங்கெத சரித்திரம்.

## கும்மிப்பாட்டு.

விருத்தம்.

புவிதனையாண்டிடும் ருக்மாங்கதனெனும் புனிதனும்விருதம்புரிந்து
அவனியெங்கும்பரவி ஏகாதேசியெனும் அனுஷ்டித்துவந்தகதையை
கவியாகவுரைத்து இவ்வுலகினிலுள்ள கன்னியர்கள்பாடும்குமியாகயா
[னும்கூற
செவிகூர்ந்து பெரியோர்கள் சிறியதோர்வெண்பாவை செப்பிடும்கல்
[வியை செப்புவீர்களே.

139936

(கும்மிப்பாட்டு மெட்டு)

1. சாரங்கராஜாவுன்பாதமலர்தன்னை
   சரணமென்று அடியாள்பணிந்தேன்
பாரெங்கும்புகழும் ருக்மாங்கதசரித்ரந்தன்னை
   பாடவென்று கிருபைதாருமென்றேன்

2. தாரணியோர்கள் புகழ்ந்தேற்றும்
   தாமோதரன்பாதம் நான்பணிந்தேன்
பூரணமாகநிறைவேற்றுமிந்த
   புண்யசரித்ரமுரைத்திடவே.

3. ஏகாதேசியின் மகிமைதன்னை
   எந்தன்மனதில் உரைத்திடவே
கோகுலந்தன்னில்வளர்ந்தவரேகிருஷ்ணா
   கோவிந்தா உன்பாதம் நான்பணிந்தேன்

4. அண்டமுழுவதும் உண்டவரேசாமி
   ஆலிலைமேல்பள்ளிகொண்டவரே
தொண்டர்களைக்காத்து நின்றவரேகிருஷ்ணா
   துவாரகாபுரிதன்னில்வாழும்ஹரே

5. பெண்மதியாலேஉரைத்ததொரு
   பிழைகள்ஏதாகிலும்வந்தாலும்
கண்ணாவுந்தன்மனதுசகித்தென்னை
   காத்தருள்செய்திடவேணுமையா

0785MSL6,1R
NLB

6. அகிலஜெகத்துக்கும் ரக்ஷகியே
   அனைவர்க்குநாவிலுகந்தவளே
சகலவித்தைக்குமதிபதியேதாயே
   சரஸ்வதிஎன்நாவில் வந்தருள்வாய்

## 2-வது கட்டம்.

(முளைப்பாட்டு மெட்டு)

1. பட்டணமாம் பட்டணமாம் பீமபுரபட்டணமாம்
பட்டணத்தையாளுகின்ற ருக்மாங்கதராஜரவர்

2. அஷ்டதிக்கும்புகழ்ந்தவராம் அச்சுதரைபணிபவராம்
இஷ்டமுடன்ஏகாதேசி விருதம்தன்னைசெய்பவராம்

3. பக்தியில்மிகுந்தவராம் பகவத்தன்மையானவராம்
முக்திமிகபெற்றவராம் மூர்த்திபாதம்பணிபவராம்

4. உத்தமபுருஷருக்கு பத்தினிசந்தியா வளியாம்
மெத்தவும்பதிவிரதையாம் உத்தமசிரோன்மணியாம்

5. உத்தமியாள்பெற்றெடுத்த புத்திரன்தர்மாங்கதனும்
பக்தியுடன்பகவானை பாதபூஜைசெய்பவனும்

6. அன்னதானம்சொர்ணதானம் அநேகம்பசுதானம்
இன்னும்பலதானம்செய்து இன்பமுடன்தான்வசித்தார்

7. சித்தம்பூரித்துமவர் சக்திபுள்ளநகரந்தன்னில்
பக்திநீதிதர்மத்தினல் மெத்தஅரசாண்டிருந்தார்

## 3-வது கட்டம்.

(வைதீகன் பாட்டு மெட்டு)

1. மங்களமாய்பீமபுரம் தன்னிலந்தராஜன்
கங்கைதனில்ஸ்நானம்செய்து சிங்காரமதாக

2. அனுஷ்டானஜெபதபங்கள் அரசனுமுடித்து
கனிவாகதர்மாங்கத ராஜனுடன்கூடி

3. ஆபரணம்துலங்கநல்ல ஆடைகள்விளங்க
விவேகருட நெற்றிதன்னில், கஸ்தூரி யிலங்க

4. உன்னித மனைதன்னிலே ருக்மாங்கதராஜன்
அன்னம் புஜித்துவெகு ஆனந்தமதாக

5. சொர்ணமயமாயிருக்கும் அரண்மனைதனிலே
வர்ணசிம்மாசனந்தனிலே வந்துஇளைப்பாறி

6. மந்திரிமாருடனேமகா ராஜன்கொலுவிருந்தார்
அந்தசமயந்தனிலே வசிஷ்டர்முனிவந்தார்

## 4-வது கட்டம்.

(பள்ளு ராகம்.)

1. வந்தார்வசிஷ்டமுனிபீமபுரபட்டணத்தில்
அந்தருக்மாங்கதராஜரண்டைதனிலே

2. வசிஷ்டரைக்கண்டவுடன் எழுந்திருந்துஅரசன்
வணங்கிநமஸ்கரித்து எதிரேநின்றார்

3. நவரத்னசிம்மாசனத்தில் உட்காரச்செய்துராஜன்
நானுவிதமாகஸ்தோத்திரம்செய்தார்

4. பட்டணத்திலிதுவரையும் அரசாண்டேன்நான்
பகவானையொருநாளும் பூஜிக்கவில்லை

5. எந்தவிதம் பகவானை பூஜைசெய்யலாமிப்போ
எந்தனுக்கருளுமென்று முனிவரிடத்தில்

6. இந்தவிதமாகவே ராஜன்கேட்டுநிற்க
சந்தோஷத்துடனேமுனி நாதருரைப்பார்

7. நந்தவனச்சோலேதன்னே உண்டுசெய்துநீ
காணுவிதபுஷ்ப ஜாதியைவைத்து

8. பக்தியுடன்புஷ்பங்களே எடுத்துக்கொண்டுவந்து
நித்யம் அர்ச்சனேகள் செய்யுமென்றூர்,

5-வது சட்டம்.

(ராஜனும் பதறியங்கே என்ற மேட்டு)

1. முனிவருடைய வார்த்தையை அணுவளவுந்தவராமல்
மனமகிழ்ந்துஅரசனும மந்திரிமாரிடம் உரைக்கவே

2. அந்தக்ஷணமே மந்திரிமார் அரசன்மகிழ்ந்துஉவாத்தையை
சொந்தவேலேக்காரர்களிடம் சொல்லியேஅவாஏவினூர்

3. சொன்னவுடனே சேவகர் சோலேவனத்தைச்செய்ததில்
உன்னிதமானபுஷ்பங்கள்உயர்ந்தவகைகள்கொண்டுவந்தார்

4. மல்லிகைமுல்லேரோஜாவும் மனேரஞ்சிதம்செண்பகம்
சொல்லிமுடியாத புஷ்பவகைஇன்னும்பலகோடிஜாதியாம்

5. நந்தவனச் சோலேதன்னில் அந்தமாய்க்குளம்வெட்டி
மந்தாரைமுல்லேபிச்சி அரும்புசெந்தாமரைகள்விளங்கவே

6. சோலேவனத்தில்துளசிவைத்து நாலுபுறமும் காவலிட்டு
சீலனுக்குநந்தவனமும் சிங்காரமாகத்துலங்கவே.

6-வது சட்டம்.

1. அந்தமுடனேஸ்நானஞ்செய்து
ஆடைகள்தரித்து ராஜன் ஆடைகள்தரித்து
சந்தோஷத்துடனேராஜன் சிந்தையில்மகிழ்ந்து

2. நித்தியானுஷ்டானம்செய்து
நிஷ்டைகள்முடித்து ராஜன் நிஷ்டைகள்முடித்து
பக்தியுடனே சோலையில்வந்து புஷ்பங்கள்தன்னை

3. சொர்ணத்தாலிசைந்ததொரு
குடலைதன்னிலே ராஜன் குடலைதன்னிலே
வர்ணவர்ணமானமலர்கள் எடுத்துக்கொண்டுவந்தார்

4 புகழ்ந்தராஜன் புத்மனுடனே
மகிழ்ந்துமெத்தவே ராஜன் மகிழ்ந்துமெத்தவே
உகந்திருக்குப்பகவானுக்கு அர்ச்சனைசெய்தார்

5. யானைக்கு வந்திடர்தீர்த்த
ஆதிமூலரை ராஜன் ஆதிமூலரை
தீனரக்ஷகாஎன்றுசொல்லி தினமும்பூஜித்தார்

6. ஒருதினத்தில் உகந்தராஜன்
மலர்களையெடுத்து ராஜன் மலர்களையெடுத்து
அரண்மனைக்குவந்தார் அந்த தருணந்தன்னிலே.

7-வது கட்டம்.

1. அன்புடனேநாரதமுனி தம்பூருசகிதமாகவே.
இன்பமாகராஜரிடத்தில் எழுந்தருளியாகினர்

2. நாரதரைக்கண்டவுடனே நமஸ்கரித்து ராஜனும்
பூரணமாகஎடுத்துவந்த புஷ்பங்களைக்கரத்தினால்

3. இன்று இவரைத்தெய்வமென்று இன்பமாகராஜனும்
கொண்டுவந்த புஷ்பங்கள்தனை குடலையுடனேபூஜித்தார்

4. பூஜைசெய்துராஜன்நிற்க முனிவருக்கெதிராகவே
வாசனையானமலர்களைக்கண்டு நாரதமுனிமகிழவே

(டோ
5. இந்தவிசித்திரமானமல்ரை இதுவரையிலுங் கண்டதுண்
இந்திரலோகத்தில்கூட இருக்குமோ இந்தவிசித்ரங்கள்

6. இந்திரனிடத்தில்இதைக்கொண்டுபோய் அறிவிப்போ
(மென்றுமுனிவரும்
அந்த விசித்ரமானமலரை முந்திதன்னில்முடியவே

7. ராஜனிடத்தில்விடைகள்பெற்று நாரதமுனிநடக்கவே
வாசனையானமலர்களைக்கொண்டு வானுலகத்திலுதிக்கவே

---

8வது கட்டம்

இராகம் [அஸ்தகிரிநாதனுக்கு என்ற மெட்டு.]

பல்லவி

1. இன்பமாய்வந்த முனியை இந்திரனெழுந்துபணிய

அனுபல்லவி.

அன்புடன் அரும்புமலர்தன்னைக்கொண்டுமுன்னேசென்று
(இன்ப

2. தீனரக்ஷகர்குகந்த திவ்யமலர்கள்தன்னை
வானுலகம்தன்னிலரசாளும்தேவராஜன்கண்டு [இன்ப]

3. அஷ்டதிக்கும்வாசித்திடும் அரும்புமலர்கள்தன்னை
இஷ்டமுடன்நாரதரும் இந்திரனிடம்தனிககொடுக்க [இ]

4. கொடுத்தமலர்தன்னையிரு கரங்களினால்வாங்கியதை
எடுத்தொருவசனமுனி நாதாஎன்றுஇந்திரன்சொல்வான்

5. இந்தவிசித்ரமலர்கள் எங்கிருந்ததோமுனியே
எந்தனுக்கருள்செய்திட வேணுமென்றுமிகவணங்கி [இ]

## 9வது கட்டம்.

1. சொல்வார்நாரதர்மகிழ்ந்துஇந்திரனிடம்
சொல்வார் நாரதர் மகிழ்ந்து.

2. செல்வமொடுவிளங்கும் ஸ்ரீஹரிபாதம்தன்னை
சிந்தைமகிழ்ந்து பூஜிக்கும் ருக்மாங்கதரை [சொல்]

3. பூமியில்ருக்மாங்கதன் பூஞ்சோலைதன்னைவைத்து
பூஜைசெய்குரானென்று அவ்வரசனை [சொல்]

4. சியாமளவர்ணகோதண்ட ஸ்ரீஹரியான
சாரங்கேசனைப்பணியும் ராஜன்மகிமை [சொல்]

5. அந்தவிசித்ரமலர் உந்தனுக்குவேண்டுமானல்
அதனையெடுத்துவந்து பூஜிப்பாயென்று [சொல்]

6. திருடியமலர்களைதினமும் எடுத்துவந்து
ஹரிபூஜைசெய்வாளோ என்றுஇந்திரன்வினவ [சொல்

## 10வது கட்டம்.

நந்தி ஓநந்தி என்ற மெட்டு.

1. நாரணரைபூஜைசெய்வதில் களவுண்டோ இந்திரா
ராஜேந்திரா
நானொருவசனத்தை உரைசெய்வேனிதைக்கேள் இந்திரா
தேவேந்திரா

2. பாருலகம்தன்னில் பிரமச்சாரி இந்திரா ராஜேந்திரா
பிராமணனொருவன்தாசிவைத்திருந்தான் இந்திரா
தேவேந்திரா

3. ராஜாதிராஜர்கள்பூஜைசெய்வதற்காக இந்திராராஜேந்திரா
வைத்தசோலையில் மலரெடுத்து தாசிக்கே கொடுப்பான்
இந்திரா தேவேந்திரா

4. தினந்தோறும்மலர்களைத்திருடிஎடுக்கும்போது இந்திரா ராஜேந்திரா
ஒருதிவ்யமலரும் கிணற்றோரத்திலிருந்தது இந்திரா தேவேந்திரா

5. கரத்துக்குஎட்டாமலே துரட்டியாலிழுத்தான் இந்திரா ராஜேந்திரா
அதுதனக்குவராமலே கிணற்றில்விழுந்ததே இந்திரா தேவேந்திரா

6. கிணற்றில்விழுந்ததென்று மனதில் வருத்தமுற்று இந்திரா ராஜேந்திரா
அதைக்கிருஷ்ணஅர்ப்பிதமென்றுகிலேசத்துடனுரைத்தான் இந்திரா தேவேந்திரா

7. கிருஷ்ணஅர்ப்பிதம்என்று சொன்னதோர்வார்த்தைக்கு இந்திரா ராஜேந்திரா
கிடைத்தசௌபாக்கியத்தை என்னென்றுநானுரைப்பேன் இந்திரா தேவேந்திரா

8. வைகுண்டநகரில்வாழும் ஸ்ரீஹரியை இந்திரா ராஜேந்திரா
பொகுவைபவமாகவே கைகூப்பிநமஸ்கரித்தான் இந்திரா தேவேந்திரா

## 11-வது கட்டம்.

1. இந்தவிதமாகவே அந்தநாரதருரைத்து
இந்திரனிடத்தில் விடைகள்பெற்று இருப்பிடம்சென்றார்

2. சந்தோஷத்துடன்கூடவே யந்தஇந்திரன்மகிழ்ந்து
சொந்தமானசப்தகன்னி மார்களை அழைத்தான்

3. அன்புடனேதேவஸ்திரிகள் வந்துவணங்க
இன்பமாகஅவர்களிடம் இந்திரனுரைப்பான்

4. தாரணியில்ருக்மாங்கதருட சோலையில்சென்று
நாரணற்கிசைந்தமலர் எடுத்துவாங்களென்றான்

5. சொன்னவுடனேகன்னிமார்கள் மிகமனமகிழ்ந்து
சொர்னக்காந்தியான விமானந்தன்னிலேறியே

6. வேகமாய்ருக்மாங்கதருட சோலையில்சென்று
அனேகவிதமானமலர் எடுத்துக்கொண்டுவந்தாள்

7. வானுலகத்தையாளும் இந்திரன் வாங்கியே மகிழ்ந்து
தீனரக்ஷகரானஹரியை தினமும்பூஜித்தான்

## 12-வது கட்டம்.

(யாரென்று கேட்டதோரு மைந்தனைப்பார்த்து என்ற மெட்டு)

1. புவனிதன்னையாளும் ருக்மாங்கதராஜாநல்ல
பூமலரெடுப்பதற்கு சோலையில்வந்தார்

2. நவகெஜிதமான அந்தவனம்தன்னிலே
நல்மலரைக்காணமலே பிரமித்துநின்றார்

3. திரும்பியுஞ்சோலைவனத்தைச் சுற்றிப்பார்த்தாரந்த
திவ்யமலரைக்காணமல் திகைத்துநின்றார்

4. மறுநாள்காலைதினத்தில் வந்துபார்த்தாரந்த
மறுமலரைக்காணேமென்று பிரமித்துநின்றார்

5. ஒய்ந்துவிட்டதோஎன்று நினைத்துக்கொண்டுராஜன்
ஒருவருஷகாலமாக இருந்துவிட்டார்

6. சாயந்திரவேளைதன்னில் வந்துபார்த்தாரந்த
ஜாதிபுஷ்பருசும்புகள் இருப்பதைக்கண்டார்

7. சூர்யஉதயந்தன்னிலே வந்துபார்ப்பாரந்த
ஜோதிமலரைக்காணமல் வாடுவாரே.

8. ஆரோதிருடர்கள் எடுத்துப்போராரிதை
அறியவேணுமென்றுசொல்லித்தேடுவாரே.

9. ஆவலுடன்சோலைதன்னில் வந்துபார்த்தாரந்த
அரும்புமலரைக் காணமல் யோஜனைசெய்தார்

10. காவலர்களண்டை தன்னில் ஓடியேவந்துராஜன்
கடுங்கோபத்துடனே உரைசெய்வார்.

11. ஏண்டாபயல்களா காவலர்களா
இதிலிருக்கும் மலர்களெல்லாம் எங்கடாவென்ருர்

12. ஆண்டவாயெங்கள்துரையே மகராஜாநாங்கள்
அறியோம் அறியோமென்று அவர்கள்சொன்னர்

13-வதுகட்டம்.

(தேடித்திரிந்தேனே சகிமாரே என்ற மெட்டு.)

1. எந்தனுடைய நந்தவனந்தன்னிலே
வந்துமலரெடுப்பதாரடா

2. அந்தமுடையநல்ல மந்தாரைமலர்களை
சொந்தமாகவந்தெடுப்பானேடா.

3. தோட்டத்தின்கதவுகள் பூட்டாமலேஎல்லோரும்
வீட்டில்படுத்துறங்கிருந்தீர்களோ.

4. ஹறிமாதவர்க்குகந்த அரும்புமலரையெல்லாம்
அறியோம்அறியோமென்றுரைத்தீர்களே

5. கண்டுதிருடர்களை கொண்டுவராமற்போனல்
செண்டாக்கினைசெய்வேன் என்றுரைத்தாரே.

6. கண்ணிற்பொறிபறக்க காவலர்களைப்பார்த்து
உன்னிதமாகவே உரைத்தாரே.

14-வது கட்டம்.

(கோட்டமிடும் ஹனுமாரே என்றமெட்டு.)

1. கோபத்துடனே ராஜனுரைக்கக் காவலாளிகள்
கொந்தளப்பொன்னுன சோலையைவந்து கார்த்தார்கள்.

2. தேவகன்னிகள் எடுத்துப்போவது தெரியாமலே அவாள்
தேடியந்தசோலையெங்கும் நாடியேபார்த்தார்.

3. மந்தகாசமானவனத்தில் பன்னகசாலைகட்டி
மகாதவம்புரிந்து ஒருமகரிஷி இருந்தார்.

4. அந்தக்காவலாளியர்கள் அனைவருங்கூடி
அவரைத்திருடரென்றுசொல்லி அவர்களும் நினைத்து

5. நேர்த்தியான சோலைவனத்திற் பூத்தமலர்களை
நித்யந்தோறும் திருடுகிறவன் நீயாடா என்றார்.

6. பார்க்குமந்த மாமுனிவரும் பயப்படாமலே
பதிலொன்றுமுறையாமலே மௌனமாயிருந்தார்.

7. வஞ்சத்திருடர்களும் பதிலுரைப்பாரோ
வாடாயெங்கள் ராஜரண்டை தன்னிலே என்றார்.

8. அஞ்சாமலந்தமாமுனிவரும் அரசனிடம் வர
அரசன் கண்டுமிகபயந்து அவரடிபணிந்தார்.

9. நந்தவனத்தில் மலரெடுப்பவன் நானில்லையென்று
ஞானதிஷ்டியாலறிந்தொருவார்த்தை யுரைப்பார்.

10. உந்தன்வனத்தில் மலர்களெடுக்கும் மாதர்களையெல்லாம்
ஒருக்ஷணத்தில் நான்பிடித்துத்தருகிறேனென்றார்.

11. கும்பச்சுரையின் விரைகள்தன்னை கொண்டுபோய்நீங்கள்
கொந்தளப்பொன்னான சோலையில்போட்டுவையுமென்றார்

12. அன்புடனந்தமாமுனிவரும் அனுக்கிரஹம்செய்து
அரசனிடத்தில் விடைகள்பெற்று ஆஸ்ரமம்சென்றார்.

## 15-வது கட்டம்.

(ராகம் சுந்தரேச இந்தவேளை என்றமெட்டு.)

1. மனமகிழ்ந்து ருக்மாங்கதரிடம், முனிவருரைத்துச் செல்லவே
வனத்தைக்காக்கும்காவலர்களை, அழைத்துராஜன் சொல்லவே.

2. அனேகம்கும்பசுரைகள்தன்னை, அந்தநந்தவனத்திலே
மனமகிழ்ந்து காவலர்களும், பரவினார்ஒருக்ஷணத்திலே.

3. கும்பச்சுரைகளானதுகளும், கொடிதெரித்துப்படரவே
அன்புடன்வரும்தேவகன்னிகை, கால்தனில்பட்டிடரவே.

4. ஆறுபேரும் மலரெடுத்து ஆகாசம்பரக்கவே
ஒருகன்னிகைமாத்திரம் இந்தச் சோலைவனத்தி லிருக்கவே

5. தேடிவரும்காவலர்களும் தேவகன்னியைப்பார்க்கவே
ஓடியே அதிவேகமாய்வந்து, உரைக்கராஜன்கேட்கவே.

6. உலகந்தன்னைச்செங்கோல்செலுத்தும் அரசனெழுந்து வருகவே
விலங்கிலிருக்கும் தேவகன்னியைபார்த்துமிகவுமருகவே.

7. வேகமாகவந்தராஜன் நின்றுமிகவும் கலங்கியே
ஓகோதெய்வப்பெண்ணின்றுவென்று உரைத்துராஜன் புலம்பவே.

## 16-வது கட்டம்.

(பட்டாமணியகாரன் என்றமெட்டு.)

### பல்லவி.

1. தேவகன்னிகையுரைத்தாள் ராஜனிடத்தில் தேவகன்னிகையுரைத்தாள்

### அநுபல்லவி.

தேவேந்திரனுடையதாசிநங்களென்று
பூவுலகந்தன்னைபாளும் பூபதிருக்மாங்கதற்கு (தேவகன்)

2. தேசாதிதேசம்புகழும்ருக்மாங்கெதாராஜாதிராஜனிடத்தில்
வாசவனுடைய தாசி ஏழுபேர் நாங்கள்
வாசிக்கும் மலர்களை வந்து எடுப்போமென்று (தேவகன்)

3. தேவலோகத்திலிருந்து இந்தவனத்தைதேடியே மலரெடுப்
ஆவலுடனேயிந்த அரும்பை எடுக்கும்போது [போம்.
பாவியான இக்கொடிகள்பட்டதேஎன்காலிலென்று(தேவ)

4. உந்தன் நகரத்திலுள்ளோர் ஏகாதேசி உபவாசம்செய்திரு
அந்தவிருதடலனை சந்தோஷத்துடன்கூட [ந்தால்
எந்தனுக்குத்தந்தீரானல் இந்திரலோகம்சேர்வேனென்று
(தேவகன்னி.)

## 17-வது கட்டம்.

(கன்றிழந்த பசுவைப்போல என்ற மெட்டு.)

1. பூவுலகம் தன்னை யாளுகின்ற பூபதியுடனே யுரைத்தாளே
ஆவலுடனந்த அரசனப்போ அப்சரஸ்திரீயுடன் சொல்லுவாரே

2. எந்தனுடைய பீம புரத்திலுள்ளோர் ஏகாதசி என்பதை அறிவாளோ
உந்தன் நகரிலோர் வண்ணாத்தி உபவாசம் தன்னைச் செய் திருக்காளென்று.

3. தேவகன்னிகை சொல்லும் வசனந்தன்னை செவிதன்னில் கேட்டா ராசனப்போ
சேவகர்கள் தன்னை அழைத்தரசன் சிந்தை மகிழ்ந்து சொலலுவாரே.

4. இந்த நகரந்தன்னில் வசிப்போர்கள் ஏகாதசி விருதம் எடுத்திருந்தால்
அந்த விருதபலனை கொடுத்தாலே அனேக திரவியம் தருவேனென்றுரைத்து.

5. தெருவுக்கு தெருவுக்கு தண்டோராவடித்து தெரிந்து வாங்களென்று ராசனுரைத்தார்
பறைகளடித்து அந்த சேவகர்கள் பட்டணத்து வீதியெங்கும் சுற்றியே வந்தார்.

18-வது கட்டம்

139936

(ஆண்டிருப்பாய் ராஜியத்தை என்ற மெட்டு)

பல்லவி

O-85 ms 6,12
H13

1. பீமபுரபட்டணம் தன்னிலோர் வண்ணாத்தி
மாமியுடன் சண்டை செய்து மருமகளிருந்தாள். (பீம)

2. யாவருக்கும் சேலைதுவைக்கும் ஏழை வண்ணாத்தி
கோபமதிகமாயடைந்து சோறு புசிக்கவில்லை. (பீம)

3. மேகவர்ணரான ஹரிமாதவர்க்குகந்த
ஏகாதசியன்று தினம் அன்னம் புசிக்கவில்லை. (பீம)

4. பறையடிக்கும் சேவகர் தன்னை பார்த்தவள் மகிழ்ந்து
விரைவுடனே ஓடிவந்து உபாரகள் செய்வாளே. (பீம)

5. என்னுடைய மாமியாளோடு எதிர்த்து வாதாடி
அன்னம்புசிக்காமலே அடியேனிருந்தேனென்றாள். (பீம)

6. ஏகாதசிதானோ அது ஏனோ நானறியேன்
ஏகாதசியாலே பலனைகுமென்றாளே. (பீம)

## 19-வது கட்டம்

(நலுங்கிட நீர்வாருமையா சுந்திரகுமாராஎன்றமெட்டு.)

1. ஓடியேவந்து வண்ணாத்திமகிழ்ந்து உண்மையதனையுறைக்க
வாடியென்றவளே வருந்தி யழைத்து வந்தார்களே சுருக்க.

2. அன்புடனே வருகும் அந்த வண்ணாத்தியை அரசனிடத்தில் காட்ட
இன்பமுடைய விருதம் இருந்ததும் மெய்யா என்னடி என்று கேட்டார்.

3. அடியேனொருதினம் அன்னம் புசிக்கவில்லை அய்யா இது மெய்தான்
வடிவுள்ள கன்னிகைக்கு ஸ்வர்ணவிமானம் வந்தாலே ஏகாதசி தான்.

4. நேசத்துடனுரைத்து தண்ணீரை எடுத்துவிட பாசக்கொடிகள் விலக்க
தாசிமகிழ்ந்து ஏகாதசி மகிமை சொல்லி ஆகாசலோகம் பறக்க.

5. அன்பு மிகுந்த அரசன் அந்த வண்ணாத்திக்கு அனேகதிரவ்யங்கள் கொடுத்தார்
இன்பமுடைய விருதம் என்ன மகிமை யென்று ஏகாதசியை எடுத்தார்.

6. யானைமீதில் தண்டோராவடித்து அனைவர்க்கும் தெரியச் சொன்னார்
தினரக்ஷகர்க்குகந்த விருதஞ்சொல்லி தேசங்கள் தோறும் சொன்னார்.

---

20-வது கட்டம்.

(ஆனந்தக்கோனாரே என்றமெட்டு.)

பல்லவி.

1. தேசமெல்லாம்புகழ்ந்தார் ருக்மாங்கெதராஜாவிருதமிருந்தார்

அநுபல்லவி.

ஆசாபாசமது தன்னையும்போக்கி அன்பாய் விளங்கும் ஹரியின்மேலாக்கி
நேசமுடனே பகவானை நோக்கி, ஏகாதேசி என்று எங்கும் பேராக்கி (தேச)

2. அருண உதயந் தன்னிலெழுந்து, அன்புடனே ப்ராதஸ் நானங்கள் செய்து
கருணையுடனே தசமி தினத்தில் திருவாராதனம் செய்து ஒருவேளை புஜித்து (தேச)

3. ஏகாதசியன்று ஒன்றும் புஜியாமல், எல்லோருமாக பகவானைத்தேடி
பாகவதாள்கூடி கீதங்கள்பாடி, பரமானந்தக் கண்ணன் பாதம் கொண்டாடி (தேச)

4. பத்தினியாகிய சந்தியாவளியும் பாலன் தர்மாங்கத ராஜனுடன் கூட

உத்தம புருஷர்க்குகந்த விருதம்தன்னை சிரத்லதயுடனே
உபவாசம் செய்தார்கள் (தேச)

5. பானு உதயத்தில் ஸ்நானங்கள் செய்து, பக்தியுடனே தளி
கைகள் செய்து
தீனரக்ஷகர்க்கு ஆராதனை செய்து துவாதசியன்றும் பார
ணை செய்தார்கள் (தேச)

---

## 21-வது கட்டம்.

(வேடையில் வாகா வாருமென்ற மெட்டு.)

1. பீமபுரத்தையாளும் அரசனும் பொகு பக்தியுடனே விரு
த மிருந்தார்
ஏமபுரம் தனைநாடாமலே எல்லோரும் ஹரிபாதம் பணிந்
தார்
2. நந்தகோவிந்தாவென்று பாடி எல்லோரும் நவநீத சோர
னைத்தேடி
முகுந்த முராரே என்று கொண்டாடி முரளிகானலோல
ரை நாடி
3. சரணம் சரணமென்று ஸ்துதித்து எல்லோரும் சந்தோஷ
மாகக் கைகுவித்து
தரணி யளந்தவரை நினைத்து எல்லோரும் தாமோதரா
என்று ஸ்மரித்தாள்

4. ஏமபுரத்தையாளும் அரசனும் பொகு இந்த வைபவத்தை
யுங்கண்டார்
நாமிருப்பதி லொருபயனுமில்லே யென்று ராஜினாமா
எழுதிக்கொண்டார்